# நாகர்கோவில் மாநகராட்சி

நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022–இல் நாகர்கோவில் மாநகராட்சி நியமன குழு உறுப்பினர் மறைமுக தேர்தல் 31.03.2022 முற்பகல் நடைபெற்றது. மொத்தம் உள்ள 52 மாமன்ற உறுப்பினர்களில் 44 மாமன்ற உறுப்பினர்கள் நியமன குழு தேர்தலில் கலந்துகொண்டார்கள். அதில் திருமதி. எஸ் சோபி என்பவர் போட்டியின்றி நாகர்கோவில் மாநகராட்சி நியமன குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார் என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு.

**தீர்மானம் எண். 292 – பதிவு செய்யப்பட்டது.**

# நாகர்கோவில் மாநகராட்சி

நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022–இல் நாகர்கோவில் மாநகராட்சி நிலைக்குழு தலைவர்களுக்கான தேர்தல் 31.03.2022 பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலைகுழுக்களாகிய கணக்கு குழு, பொதுசுகாதார குழு, கல்விக்குழு, வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு, நகரமைப்பு குழு மற்றும் பணிகள் குழு உறுப்பினர்களில், பொது சுகாதார குழு உறுப்பினர் திருமதி. பி. அனுஷா பிரைட் மற்றும் பணிகள் குழு உறுப்பினர் திருமதி. ப. சிஜி ஆகிய இருவரும் கலந்து கொள்ளவில்லை. மீதமுள்ள 34 மாமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள். கணக்கு குழு தலைவராக 7–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. எ. மேரி ஜெனட் விஜிலா தேர்வு செய்யப்பட்டார், பொது சுகாதார குழு தலைவராக 14–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. என். கலாராணி தேர்வு செய்யப்பட்டார், கல்விக்குழு தலைவராக 21–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜெ.ஜோனா கிறிஸ்டி தேர்வு செய்யப்பட்டார், வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவராக 1–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ற்றி. தங்கராஜா தேர்வு செய்யப்பட்டார், நகரமைப்பு குழு தலைவராக 36–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ஆர். ரமேஷ் தேர்வு செய்யப்பட்டார் மற்றும் பணிகள் குழு தலைவராக 38–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி. சுப்பிரமணியம் தேர்வு செய்யப்பட்டார் என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு.

**தீர்மானம் எண். 293– பதிவு செய்யப்பட்டது.**